2021. 09. 18

# SINGAPORE

## HISTORY OF REDEMPTION SEMINAR

Lecture 1

HORA
The History of Redemption for All Nations

மீட்பின் வரலாறு கருத்தரங்கு - I

# நாளாகாம வம்ச வரலாறில் மீட்பின் திட்டம் (1 நாளா. 6:49-53)

நாளாகம வம்ச வரலாறு 1 நாளாகமம் 1-9 அத்தியாயங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**(1) இவ் வம்ச வரலாறானது மீட்பின் வரலாற்றை சுமார் 1,159 பெயர்களுக்குள் அடக்கியுள்ளது.**

| அதிகாரம் 1 | ஆதி. 2 | ஆதி. 3 | ஆதி. 4 | ஆதி. 5 | ஆதி. 6 | ஆதி. 7 | ஆதி. 8 | ஆதி. 9 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 191 | 161 | 89 | 148 | 60 | 119 | 140 | 128 | 123 | **1159** பேர் |

**(2) நாளாகாம வம்ச வரலாறில் தொகுக்கப்பட்ட வேதாகம வரலாறு மிகவும் விரிவானது ஆகும்.**

ஆதாமிலிருந்து பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து மீண்டும் திரும்பும் வரையான காலப்பகுதியான சுமார் 3,700 வருடங்களின் பரந்த வரலாற்றை இது பதிவு செய்கிறது.

**1. நாளாகாம வம்ச வரலாறில் ஒவ்வொரு அத்தியாயத்தின் உள்ளடக்கம் பின்வருமாறு**

| | |
|---|---|
| **ஆதி. 1** | ஆதாம் முதல் யாக்கோபு (ஈசா) வரையான வம்ச வரலாறு |
| **ஆதி. 2** | யூதாவின் குமாரர்களின் வம்ச வரலாறு |
| **ஆதி. 3** | தாவீதின் குமாரர்களான யூதாவின் ராஜாக்களின் வம்ச வரலாறு |
| **ஆதி. 4** | யூதாவின் கோத்திரம், சிமியோனின் கோத்திரம் |
| **ஆதி. 5** | ரூபனின் கோத்திரம், காத் கோத்திரம், மனாசேவின் அரை கோத்திரம் (யோர்தானின் கிழக்கில்) |
| **ஆதி. 6** | லேவியர்கள் மற்றும் ஆசாரியர்களின் வம்ச வரலாறு |
| **ஆதி. 7** | இசக்கார் கோத்திரம், பெஞ்சமின் கோத்திரம், நப்தலி கோத்திரம், மனாசேயின் அரை கோத்திரம், எப்பிராயீம் கோத்திரம், ஆசேர் கோத்திரம் |
| **ஆதி. 8** | பெஞ்சமின் கோத்திரத்தின் வம்ச வரலாறு |
| **ஆதி. 9** | சிறையிருப்பிலிருந்து திரும்பியவர்கள், லேவியர்கள் மற்றும் ஆசாரியர்களின் வம்ச வரலாறு |

**2. நாளாகாம வம்ச வரலாற்றின் குணாதிசயங்கள்**

**(1) யூதா மற்றும் பெஞ்சமின் கோத்திரங்களுக்கு முக்கியத்துவம்**
யூதா கோத்திரம் (அதி. 2, 4) மற்றும் பெஞ்சமின் கோத்திரம் (அதி. 7, 8) இரண்டு முறை பட்டியலிடப்பட்டுள்ளனர்.

- **இது ஏன்?**

சாலமோனின் மரணத்திற்குப் பிறகு ராஜ்யம் யூதாவின் தெற்கு ராஜ்யம் மற்றும் இஸ்ரேலின் வடக்கு ராஜ்ஜியமாகப் பிரிந்தபோது, இரண்டு கோத்திரத்தினரும் தென் ராஜ்யமான யூதாவுக்குள் உள்ளடங்குகின்றனர்.

**1 இராஜாக்கள் 12:21**
21. ரெகொபெயாம் எருசலேமுக்கு வந்தபோது, இஸ்ரவேல் வம்சத்தாரோடே யுத்தம்பண்ணவும், ராஜ்யத்தைச் சாலொமோனின் குமாரனாகிய தன்னிடமாகத் திருப்பிக்கொள்ளவும், யூதா வம்சத்தார் பென்யமீன் கோத்திரத்தார் அனைவருமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட யுத்தவீரர் லட்சத்து எண்பதினாயிரம் பேரைக் கூட்டினான்.

- **இக் கோத்திரங்கள் தென் ராஜ்யத்திற்குள் அடங்குகின்றனர் என்பது எதைக் குறிக்கிறது?**

இரண்டு கோத்திரத்தினரும் தேவனின் உடன்படிக்கையோடு சேர்ந்துகொண்டனர் என்பதை இது குறிக்கிறது.

2 சாமுவேல் 7:12-13 இல் உள்ள தாவீதின் உடன்படிக்கை மேசியா தாவீதின் வழித்தோன்றலாக வருவார் என்று உறுதியளிக்கிறது.

**2 சாமுவேல் 7:12-13**
12. உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரைபண்ணும்போது, நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்.
13. அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான் அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.

- **உடன்படிக்கையில் சேர்ந்துகொள்பவர்களுக்கு அனைத்து விடயங்களும் திட்டமிடப்பட்டு நிச்சயிக்கப்படும்**

**2 சாமுவேல் 23:5**
5. என்னுடைய வீடு தேவனிடத்தில் இப்படியிராதோ? சகலமும் திட்டம்பண்ணப்பட்டிருக்கிற நிச்சயமான நித்திய உடன்படிக்கையை என்னுடன் அவர் செய்திருக்கிறார் ஆதலால் என்னுடைய எல்லா ரட்சிப்பும் எல்லா வாஞ்சையும் வளர்ந்தோங்கச் செய்யாரோ?

**(2) லேவியர்கள் மற்றும் ஆசாரியர்களின் வம்ச வரலாறிற்கு முக்கியத்துவம்**

லேவியர்கள் மற்றும் ஆசாரியர்களின் வம்ச வரலாறு 6 மற்றும் 9 அதிகாரங்களில் இரண்டு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக 1 நாளாகமம் 6 ம் அதிகாரம் 81 வசனங்களைக் கொண்டுள்ளது மற்றும் 1 முதல் 9 வரையுள்ள அதிகாரங்களில் இவ் அதிகாரம் மிக நீளமானது. இதற்கு காரணம் என்ன?

- **லேவியர்கள்** தேவனின் கூடாரத்தின் அனைத்து சேவைகளுக்காகவும் நியமிக்கப்பட்டனர்.

**1 நாளாகமம் 6:48**
48. அவர்கள் சகோதரராகிய மற்ற லேவியர் தேவனுடைய ஆலயமாகிய வாசஸ்தலத்தின் பணிவிடைக்கெல்லாம் வைக்கப்பட்டிருந்தார்கள்.

தேவனின் இன்றைய சபைக்கான எங்கள் சேவையின் முக்கியத்துவத்தை இது சுட்டிக்காட்டுகிறது.
**கொலோசெயர் 1:24**
24. இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்தில் நிறைவேற்றுகிறேன்

- **ஆசாரியர்கள்** சர்வாங்க தகன பலிபீடத்திலும் தூப பீடத்திலும் பலி செலுத்தினர்.

**1 நாளாகமம் 6:49**
49. ஆரோனும் அவன் குமாரரும் சர்வாங்க தகனபலிபீடத்தின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டும் பீடத்தின்மேல் தூபங்காட்டி, மகா பரிசுத்த ஸ்தலத்தின் எல்லாவேலைக்கும், தேவனுடைய தாசனாகிய மோசே கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேலுக்காகப் பாவநிவிர்த்தியுண்டாக்குகிறதற்கும் வைக்கப்பட்டிருந்தார்கள்.

இன்று நாம் தேவனின் ஆசாரியர்களாக இருக்கின்றோம்.
**1 பேதுரு 2:9**
9. நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

இது தேவனுக்கு நாம் ஏறெடுக்கும் ஆராதனை மற்றும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுகிறது.

தேவனுடைய வார்த்தை மற்றும் ஜெபம் இல்லாமல் ஒருவரை பரிசுத்தமாக்க முடியாது.
**1 தீமோத்தேயு 4:5**
5 அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்.

**(3) இந்த வம்ச வரலாறு மத்தேயு 1 இல் இயேசுவின் வம்ச வரலாறுடன் இணைக்கப்பட்டுள்ளது.**
(போதகர் ஆபிரகாம் பார்க் இதை முதல் முறையாக முறையாக தொகுத்து வழங்கினார்)

எபிரேய வேதாகமத்தின் கடைசி புத்தகம் (பழைய ஏற்பாடு) நாளாகமப் புத்தகம் ஆகும்.
புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகம் மத்தேயுவின் புத்தகம் ஆகும்.
பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன?
வம்ச வரலாறின் மூலம்.

**மத்தேயு 1:13 இல் சொரொபாபேலின் வழித்தோன்றலாக பட்டியலிடப்பட்ட கடைசி நபர் "அபியூத்" என்பவர் யார்?** 1 நாளாகாம் 3 இன் படி, சொரொபாபேலின் சந்ததியினரிடையே பட்டியலிடப்பட்ட கடைசி நபர் ஓதாயா என்பவராவார்.

| **1 நாளா. 3** | செருபாபேல் (வ.19) | அனனியா (வ.19) | செக்கனியா (வ.21) | செமாயா (வ.22) | நெயாரியா (வ.23) | எலியோனாய் (வ.24) | ஓதாயா (வ.24) |
|---|---|---|---|---|---|---|---|
| **மத். 1** | செருபாபேல் | -------------------------> | | | | | அபியூத் |

**இதன் அடிப்படையில், ஓதாயாவும் அபியூத்தும் ஒரே நபர் ஆவர்.**

ஓதாயா என்பது ஹோதய்வாஂஹு (הֹדַוְיָהוּ), அதாவது "தேவனின் மகிமை (கம்பீரம்)".

அபியூத் என்பது எபிரேய மொழியில் அபிஂஹுத் (אֲבִיהוּד), அதாவது "பிதாவின் மகிமை (கம்பீரம்)".

தேவனின் மீட்பு வரலாற்று நிர்வாகத்தின்படி, மத்தேயுவின் வம்ச வரலாறு சொரொபாபேல் மற்றும் ஓதாயா (அபியூத் ) என்பவர்களுக்கிடையிலான 5 பேரைத் தவிர்த்து 14 தலைமுறைகளுக்கு வம்ச வரலாறை சரிசெய்கின்றது.

**3. நாளாகாம வம்சவரலாறில் சேஷ்டபுத்திரன் குறித்தான காணோட்டம்**

**1 நாளாகமம் 5:1-2**

1. ரூபன் இஸ்ரவேலுக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன் ஆனாலும் அவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தைத் தீட்டுப்படுத்தினபடியினால், கோத்திரத்து அட்டவணையிலே அவன் முதற் பிறந்தவனாக எண்ணப்படாமல், அவனுடைய சேஷ்டபுத்திர சுதந்தரம் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பின் குமாரருக்குக் கொடுக்கப்பட்டது.

2. யூதா தன் சகோதரரிலே பலத்ததினால் ராஜாதிபத்தியம் அவன் சந்ததியிலுண்டானது ஆகிலும் சேஷ்டபுத்திர சுதந்தரம் யோசேப்புடையதாயிற்று.

**(1) ரூபன் உயிரியல் ரீதியாக முதல் குழந்தை ஆவான்.**

இருப்பினும், அவர் தனது தந்தையின் படுக்கையை அசுத்தப்படுத்தியதால் அவர் தனது பிறப்புரிமையை இழந்தார் (ஆதி 49:3-4).

**ஆதியாகமம் 35:22**

22. இஸ்ரவேல் அந்தத் தேசத்தில் தங்கிக் குடியிருக்கும்போது, ரூபன் போய், தன் தகப்பனுடைய மறுமனையாட்டியாகிய பில்காளோடே சயனித்தான் அதை இஸ்ரவேல் கேள்விப்பட்டான்.

**(2) யோசேப்பு ஆவிக்குரிய முதல் குழந்தை ஆவான்.**

- எபிரெயர் 11ல் உள்ள விசுவாச பட்டியலில், யோசேப்பு விசுவாசத்தின் வாரிசாக யாக்கோபுக்குப் பிறகு பட்டியலிடப்பட்டார்.

**எபிரெயர் 11:20-22**

20. விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக்குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்.

21. விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன்கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்.

22. விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்.

- யோசேப்பு ஆதியாகமம் புத்தகத்தில் வம்ச வரலாறிலிருந்து விலக்கப்பட்டார்.

**ஆதியாகமம் 48:5-6**

5. நான் உன்னிடத்தில் எகிப்துக்கு வருமுன்னே உனக்கு எகிப்துதேசத்தில் பிறந்த உன் இரண்டு குமாரரும் என்னுடைய குமாரர் ரூபன் சிமியோன் என்பவர்களைப்போல, எப்பீராயீமும் மனாசேயும் என்னுடையவர்கள்.

6. இவர்களுக்குப்பின், நீ பெறும் பிள்ளைகள் உன்னுடையவர்கள் அவர்கள் தங்கள் தங்கள் சகோதரருடைய பேரால் அழைக்கப்பட்டு அவர்களுக்குரிய சுதந்தரத்தில் பங்குபெறுவார்கள்.

இந்த நேரத்திலிருந்தே, யோசேப்பு வம்ச வரலாறிலிருந்து விலக்கப்பட்டார், மற்றும் அவரது இரண்டு மகன்கள் - எப்பிராயீம் மற்றும் மனாசே - யோசேப்புக்கு பதிலாக பன்னிரண்டு கோத்திரங்களில் இடம்பெற்றனர்.

- “இவர்களுக்குப்பின், நீ பெறும் பிள்ளைகள்” என குறிப்பிடப்படுபவர்கள் யார்?

**(3) யூதா வம்ச வரலாறில் முதல் குழந்தை ஆவான்.**
**1 நாளாகமம் 5:2**
2. யூதா தன் சகோதரரிலே பலத்ததினால் ராஜாதிபத்தியம் அவன் சந்ததியிலுண்டானது ஆகிலும் சேஷ்டபுத்திர சுதந்தரம் யோசேப்புடையதாயிற்று.

**1 நாளாகமம் 4:1**
1. யூதாவின் குமாரர், பாரேஸ், எஸ்ரோன், கர்மீ, ஊர், சோபால் என்பவர்கள்.

**மத்தேயு 1:2**
2. ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான் ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான் யாக்கோபு யூதாவையும் அவன் சகோதரரையும் பெற்றான்

வம்ச வரலாறின்படி, இயேசு யூதா கோத்திரத்தின் வழியாக வந்தார், ஆனால் உண்மையில், அவர் பரிசுத்த ஆவியால் கருத்தரிக்கப்பட்டதால் அவர் வம்ச வரலாறு இல்லாமலேயே வந்தார்.
**மத்தேயு 1:18**
18. இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாராகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியால் கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது.

**4. யாபேஸின் வம்ச வரலாறிற்கு முக்கியத்துவம்**

நாளாகாம வம்ச வரலாறு பெயர்களின் ஓர் தொடர்ச்சியாக இருந்தாலும், யாபேஸ் தனித்துவமாக காண்பிக்கப்படுகின்றார். அவரைப் பற்றி ஒரு விரிவான தனிப்பட்ட வர்ணனை உள்ளது.

**(1) யாபேஸ் யூதாவின் வழித்தோன்றல்.**
நாளாகாமத்தின் வம்ச வரலாறானது யாபேசுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து யூதாவின் சந்ததியினரை வலியுறுத்துகிறது. இதன்படி, நாளாகாமத்தின் வம்ச வரலாற்றில் யாபேசே மிகவும் வலியுறுத்தப்பட்ட நபர் ஆவார்.
**1 நாளாகமம் 4:9-10**
9. யாபேஸ் தன் சகோதரரைப்பார்க்கிலும் கனம்பெற்றவனாயிருந்தான். அவன் தாய்: நான் துக்கத்தோடே அவனைப் பெற்றேன் என்று சொல்லி அவனுக்கு யாபேஸ் என்று பேரிட்டாள்.
10. யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான் அவன் வேண்டிக்கொண்டதை தேவன் அருளினார்.

**(2) பாபிலோனிய சிறையிலிருந்து திரும்பிய அனைத்து இஸ்ரேலியர்களையும் யாபேஸ் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.**

| யாபேஸ் | பாபிலோனிலிருந்து திரும்பிய இஸ்ரேலியர்கள் |
|---|---|
| துக்கத்துடன் பிறந்தார் (1 நாளா. 4:9) | பாபிலோனிலிருந்து திரும்பி வந்தார்கள் மிகவும் வேதனை உள்ள இடம் |

| | |
|---|---|
| தேவன் அவருடைய வேண்டுகோளை அருளினார் (1 நாளா. 4:10)<br>மேலும் அவர் கனம்பெற்றவனாயிருந்தார் (1 நாளா. 4:9) | தேவன் எங்கள் வேண்டுதலை நிறைவேற்றும்போது.<br>கனம்பெற்றவர்களாக ஆகலாம் |
| <ஜெபம் ><br>1. உண்மையில் என்னை ஆசீர்வதியும்<br>2. மற்றும் என் எல்லையை பெரிதாக்கும்<br>3. உமது கரம் என்னோடிருந்து<br>4. என்னைத் தீங்கிலிருந்து காப்பாற்றும் அது என்னை துக்கப்படுத்தாதபடிக்கு! | இது எங்கள் ஜெபமாகவும் இருக்க வேண்டும். |

- எபிரேய மொழியில் ‘‘வலி’’ என்பது ஓட்செவ் (עֹצֶב) ஆகும்.

இஸ்ரேலியர்கள் பாபிலோனில் நாடுகடத்தப்பட்டபோது ஏற்பட்ட **துயரத்தை** விவரிக்க இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது.

**ஏசாயா 14:3**

3. கர்த்தர் உன் துக்கத்தையும் உன் தத்தளிப்பையும், நீ அடிமையாக்கப்பட்டிருந்த கடினமான அடிமைத்தனத்தையும் நீக்கி, உன்னை இளைப்பாறப்பண்ணும் அக்காலத்திலே,

- ‘‘கனம்’’ என்பது காவேட் (כָּבֵד) ஆகும், அதாவது ‘‘மகிமைபெற வேண்டும்’’ என்பதாகும்.

இந்த வார்த்தை இஸ்ரவேலர்களை பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து விடுவித்து அவர்களை மகிமைப்படுத்தும் தேவனின் வாக்குறுதியில் பயன்படுத்தப்பட்டது.

**ஏசாயா 43:4**

4. நீ என் பார்வைக்கு அருமையானபடியினால், கனம்பெற்றாய் நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்.

நாம் பாபிலோனைப் போல இருக்கும் இந்த உலகத்திலிருந்து விடுதலையாகி, பரலோக ராஜ்யத்திற்குள் நுழையும் போது, நம்முடைய வலியும் துக்கமும் முடிவடையும். மேலும் நாம் கனம்பெற்றவர்களாக ஆக்கப்படுவோம்.

**வெளி. 18:4**

4. பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.

**முடிவு: நமது பிரதான ஆசாரியரான இயேசு கிறிஸ்துவுக்கு முக்கியத்துவம்**

**(1) நாளாகம வம்ச வரலாறில் காணப்படும் கையாஸ்டிக் அமைப்பு**

A 1 நாளாகமம் 1:1-54 : இஸ்ரேலுக்கு முன் உலகம் (இஸ்ரேலின் வேர்)
B 1 நாளாகமம் 2:1-2 : இஸ்ரேலின் அனைத்து குமாரர்களும்
C 1 நாளாகமம் 2:3-4:23 : யூதா - தாவீது ராஜாவின் கோத்திரம்
D 1 நாளாகமம் 4:24-5:26 : இஸ்ரேலின் கோத்திரம்
E 1 நாளாகமம் 6:1-47 : பிரதான ஆசாரியன் மற்றும் லேவியின் சந்ததியினர்
F 1 நாளாகமம் 6:48-49 : ஆசாரியர்களின் கடமைகள்
F 1 நாளாகமம் 6:50-53 : பிரதான ஆசாரியன்
E 1 நாளாகமம் 6:54-81 : குடியேற்றங்களில் லேவியின் சந்ததியினர்
D 1 நாளாகமம் 7:1-40 : இஸ்ரேலின் கோத்திரம்
C 1 நாளாகமம் 8:1-40 : பெஞ்சமின் - சவுல் ராஜாவின் கோத்திரம்
B 1 நாளாகமம் 9:1 : கணக்கிடப்பட்ட அனைத்து இஸ்ரவேலர்கள்
A 1 நாளாகமம் 9:1-34 : இஸ்ரேலின் புனரமைப்பு

**(2) பிரதான ஆசாரியனின் வம்ச வரலாறிற்கு அதிக முக்கியத்துவம்**

- மெல்கிசேதேக்கின் முறைமையின்படி இயேசு பிரதான ஆசாரியராக இருக்கிறார்.

**எபிரெயர் 6:20**
20. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

- மெல்கிசேதேக்கின் முறைமை வம்ச வரலாறு இல்லாமல் உள்ளது.

**எபிரெயர் 7:1-3**
1. இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான் ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான்.
2. இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான் இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அருத்தமாம்.
3. இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன் இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.

- மாம்சமாக பிறப்பதற்கு, இயேசு பரிசுத்த ஆவியால் கருத்தரிக்கப்பட்டார்.

**மத்தேயு 1:18**
18. இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாராகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியால் கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது.

எனவே, அடிப்படையில், இயேசு வம்ச வரலாறு இல்லாதவர்.

- தேவனின் ராஜ்யத்தில் நுழைய மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நாமும் இருக்க வேண்டும்.

**யோவான் 1:12**
12. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

**யோவான் 3:5**
5. இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

**1 கொரிந்தியர் 12:3**
3. ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**மத்தேயு 10:37-38**
37. தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல் மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.
38. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.

2021. 09. 18

# SINGAPORE

## HISTORY OF REDEMPTION SEMINAR

Lecture 2

HORA
The History of Redemption for All Nations

மீட்பின் வரலாறு கருத்தரங்கு - II

## இயேசு கிறிஸ்து, நித்திய பிரதான ஆசாரியர் (1 நாளா. 4:9-10)

பிரதான ஆசாரியன் கோஹென் கடோல் (כֹּהֵן גָּדוֹל) என்று எபிரேய மொழியில் அழைக்கப்படுகின்றார். இதன் அர்த்தம் "பெரிய ஆசாரியன், மகா ஆசாரியன்" என்பதாகும். மேலும் கோஹென் ரோஷ் (כֹּהֵן ראשׁ) என்ற எபிரேய பதம் "ஆசாரிய தலைவன்" என்ற அர்த்தத்தை கொடுக்கின்றது.

**லேவியராகமம் 21:10**
10. தன் சகோதரருக்குள்ளே பிரதான ஆசாரியனாகத் தன் சிரசில் அபிஷேகதைலம் வார்க்கப்பட்டவனும், அவனுக்குரிய வஸ்திரங்களைத் தரிக்கும்படி பிரதிஷ்டைபண்ணப்பட்டவனுமாயிருக்கிறவன் எவனோ, அவன் தன் பாகையை எடுக்காமலும், தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளாமலும்,

பழைய ஏற்பாட்டில் உள்ள பிரதான ஆசாரியன் உண்மையான பிரதான ஆசாரியராகிய இயேசுவை முன்னறிவிக்கிறார்.

**எபிரெயர் 3:1**
1. இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்

இயேசுவே நம் நித்திய பிரதான ஆசாரியர்.

**எபிரெயர் 6:20**
20. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

**சங்கீதம் 110:4**
4. நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம் மாறாமலுமிருப்பார்.

### 1. பிரதான ஆசாரியன் ஆண்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்

**(1) பழைய ஏற்பாட்டில் பிரதான ஆசாரியன் ஒரு ஆண் ஆவார்.**

**எபிரெயர் 5:1**
1. அன்றியும், மனுஷரால் தெரிந்துகொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காக தேவகாரியங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான்.

- **ஆண்கள் மத்தியில் இருந்தே பிரதான ஆசாரியன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

எபிரேயர் 5:1 இல், ''தெரிந்துகொள்ளப்பட்ட'' என்ற பதமானது ***λαμβάνω*** (லம்பானோ) என்ற கிரேக்க சொல்லிலிருந்து வருகின்றது. இதன் அர்த்தம் ''இறுக்கப்பிடிப்பு, தேர்ந்தெடுக்கப்பட்டது'' என்பதாகும்.

- அவர் காணிக்கைகள் மற்றும் பலிகள் ஆகிய இரண்டையும் வழங்குகிறார்.

**எபிரெயர் 5:1**
1. அன்றியும், மனுஷரால் தெரிந்துகொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காக தேவகாரியங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான்.

**எபிரெயர் 8:3**
3. ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான் ஆதலால் செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது.

**(2) மனிதனாக அவதரித்த தேவனாகிய இயேசுவே பிரதான ஆசாரியர்**
**யோவான் 1:1**
1. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

**யோவான் 1:14**
14. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார் அவருடைய மகிமையைக் கண்டோம் அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

- **மாறாத ஆசாரியத்துவம் (பிரதான ஆசாரியர் மாற்றமடையமாட்டார்)**

**எபிரெயர் 7:12**
12. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்படவேண்டியதாகும்.

- **நித்திய பிரதான ஆசாரியர்**

**எபிரெயர் 6:20**
20. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

**(3) மீட்பு-வரலாற்று முக்கியத்துவம்**

- தேவன் மற்றும் மனிதர்களுக்கிடையேயான உண்மையான மத்தியஸ்தர் இயேசு மட்டுமே.

**1 தீமோத்தேயு 2:5**
5. தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.

- பாவம் இல்லாதவர் இயேசு மட்டுமே.

**எபிரெயர் 7:27**
27. அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே ஒரேதரம் செய்து முடித்தார்.

**எபிரெயர் 4:15**
15. நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

**2 கொரிந்தியர் 5:21**
21. நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

**2. பிரதான ஆசாரியன் ஆண்டின் ஒரு நாளில் பரிசுத்த ஸ்தலத்தினுள் உட்பிரவேசிக்கின்றார்.**

**(1) அவர் எப்போது உட்பிரவேசிக்கின்றார்? - பாவநிவாரண நாள், 7 வது மாதத்தின் 10 வது நாள்**

**எபிரெயர் 9:7**
7. இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்.

**லேவியராகமம் 25:9**
9. அப்பொழுதும் ஏழாம் மாதம் பத்தாந்தேதியில் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும் பாவநிவாரணநாளில் உங்கள் தேசமெங்கும் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும்.

**லேவியராகமம் 16:29**
29. ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே, சுதேசியானாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியானாலும், தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவதுமன்றி, ஒரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும் இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது.

**(2) அவர் எத்தனை முறை உட்பிரவேசிக்கின்றார் ? - 4 முறை**

- **முதலாவதாக, அவர் நெருப்புத்தணல் அடங்கிய தூபகலசத்தோடு உட்பிரவேசிக்கின்றார்.**

**லேவியராகமம் 16:12**

12. கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத்தணலினால் தூபகலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டு வந்து,

**அவர் ஜெபம் இல்லாமல் இருந்தால் அவர் இறந்துவிடுவார் என்பதை இது காட்டுகிறது.**
**வெளி. 5:8**
8. அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு,
ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாக வணக்கமாய் விழுந்து:

- **இரண்டாவதாக, அவர் காளையின் இரத்தத்துடன் உட்பிரவேசிக்கின்றார்.**

**லேவியராகமம் 16:14**
14. பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கிருபாசனத்துக்கு முன்பாக, ஏழுதரம் தன் விரலினால் தெளிக்கக்கடவன்.

**இரத்தத்தை ஏழு முறை தெளிப்பது பரிபூரண பாவநிவிர்த்தியை குறிக்கிறது.**
**லேவியராகமம் 16:11**
11. பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவநிவாரணத்துக்கான காளையைக் கொண்டுவந்து, அதைக் கொன்று,

- **மூன்றாவதாக, அவர் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்துடன் நுழைகிறார்.**

**லேவியராகமம் 16:15**
15. பின்பு ஜனத்தினுடைய பாவநிவாரணபலியான வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தைத் திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து, காளையின் இரத்தத்தைத் தெளித்ததுபோல, அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளித்து,

- **நான்காவதாக, அவர் நெருப்புத்தணல் அடங்கிய தூபகலசத்தை வெளியே கொண்டு வருகிறார்.**

அவர் முதலில் கொண்டு சென்ற நெருப்புத்தணல் அடங்கிய தூபகலசத்தை வெளியே கொண்டு வருகிறார் (மிஷ்னா, யோமா 5: 1 8: 4)

**(3) மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மூன்றாவது தடவை வெளியே வருவதற்கும், நான்காவது முறை உட்பிரவேசிப்பதற்கும் இடையில் பிரதான ஆசாரியன் என்ன செய்கிறார்:**

- **அவர் பலியாட்டின் மீது கையை வைக்கிறார் (அசாசெல்)**

**லேவியராகமம் 16:21**
21. அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடக்கடவன்.

- **அவர் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு அவர் அணிந்திருந்த சணல்நூல் வஸ்திரங்களைக் கழற்றினார்.**

**லேவியராகமம் 16:23**
23. ஆரோன் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் வந்து, தான் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்போது, உடுத்தியிருந்த சணல்நூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிட்டு,

- **அவர் ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, தனது வஸ்திரங்களை அணிந்துகொள்கிறார்.**

**லேவியராகமம் 16:24**
24. பரிசுத்த இடத்திலே ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, தன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, வெளியே வந்து, தன் சர்வாங்க தகனபலியையும் ஜனங்களின் சர்வாங்க தகனபலியையும் இட்டு, தனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்து,

- **அவர் சர்வாங்க தகனபலியை (தினசரி பலி) செலுத்துகிறார்.**

**லேவியராகமம் 16:24**
24. பரிசுத்த இடத்திலே ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, தன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, வெளியே வந்து, தன் சர்வாங்க தகனபலியையும் ஜனங்களின் சர்வாங்க தகனபலியையும் இட்டு, தனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்து,

- **அவர் புதிய சணல்நூல் வஸ்திரங்களை அணிந்து நான்காவது முறையாக மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கிறார் (மிஷ்னா, நமது பாரம்பரியத்தின் பொக்கிஷம்).**

**(4) மீட்பு-வரலாற்று முக்கியத்துவம்**

- **சிலுவையில் இயேசு இறந்த தருணத்தில், பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையே உள்ள திரை கிழிக்கப்பட்டது.**

**மத்தேயு 27:50-51**
50. இயேசு மறுபடியும் மகாசத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்.
51. அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது கன்மலைகளும் பிளந்தது.

**எபிரெயர் 10:20**
20. அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,

- **சிலுவையில் அவரது மரணத்தின் மூலம், இயேசு ஒரேதரமான நித்திய பலியை செலுத்தினார்.**

**எபிரெயர் 9:12**
12. வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.

**3. பிரதான ஆசாரியன் அடைக்கலப்பட்டணங்களிலிருந்து ஒரு விடுதலையை அளிக்கிறார்**

**(1) அடைக்கலப்பட்டணங்கள் என்றால் என்ன?**

**அறியாமல் கொலை செய்தவர்கள் இங்கே தப்பி ஓடலாம்.**
**யோசுவா 20:2-3**
2. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: அறியாமல் கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன் ஓடிப்போயிருக்கும்படி, நான் மோசேயைக்கொண்டு உங்களுக்குக் கற்பித்த அடைக்கலப்பட்டணங்களை உங்களுக்கு ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.
3. அவைகள் உங்களுக்கு இரத்தப்பழிவாங்குகிறவனுடைய கைக்குத் தப்பிப்போயிருக்கத்தக்க அடைக்கலமாயிருக்கும்.

**நாம் மற்றவர்களை பகைக்கும்போது உணராமல் கொலைபாதகனாகவும் மாறலாம்.**
**1 யோவான் 3:15**
15. தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலைபாதகனாயிருக்கிறான் மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்.

**(2) அடைக்கலப்பட்டணத்தை விட்டு வெளியேற ஒரே வழி**

- **பிரதான ஆசாரியன் இறக்க வேண்டும்.**

**எண். 35:28**
28. கொலைசெய்தவன் பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் அடைக்கலப் பட்டணத்திலிருக்கவேண்டும் பிரதான ஆசாரியன் மரணமடைந்தபின்பு, தன் சுதந்தரமான காணியாட்சிக்குத் திரும்பிப்போகலாம்.

**யோசுவா 20:6**
6. நியாயம் விசாரிக்கும் சபைக்கு முன்பாக அவன் நிற்கும்வரைக்கும், அந்நாட்களிலிருக்கிற பிரதான ஆசாரியன் மரணமடையும்வரைக்கும், அவன் அந்தப் பட்டணத்திலே குடியிருக்கக் கடவன் பின்பு கொலைசெய்தவன் தான் விட்டோடிப்போன தன் பட்டணத்திற்கும் தன் வீட்டிற்கும் திரும்பிப்போகவேண்டும் என்று சொல் என்றார்.

**(3) மீட்பு-வரலாற்று முக்கியத்துவம்**

பிரதான ஆசாரியன் இறக்கும் போது ஒருவர் தனது சொந்த வீட்டிற்கு திரும்பலாம். நாமும் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபட்டுள்ளோம் மற்றும் பரலோக ராஜ்யத்திற்கு திரும்ப முடியும் என்பதை இது நமக்குக் காட்டுகிறது, ஏனென்றால் நம் பிரதான ஆசாரியரான இயேசு சிலுவையில் நமக்காக மரித்தார் .

**யோவான் 14:1-3**
1. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக் தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.
2. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.
3. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.

**எபிரெயர் 10:21-22**

21. தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்,
22. துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.

**முடிவு: பிரதான ஆசாரியனின் வம்ச வரலாறில் 77 தலைமுறைகள் உள்ளன**

**(1) பிரதான ஆசாரியனின் 77 தலைமுறைகள் பின்வருமாறு**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆரோன்[1] | ஏலெயாசார்[2] | பினெகாஸ்[3] | அபிசுவா[4] | புக்கி[5] | ஊசி[6] | செராகியா[7] |
| மெராயோத[8] | அமரியா[9] | அகிதூப்[10] | சாதோக்[11] | அகிமாஸ்[12] | அசரியா[13] | யோகனான்[14] |
| அசரியா[15] | அமரியா[16] | யுஅகிதூப்[17] | சாதோக்[18] | சல்லூம்[19] | இல்க்கியா[20] | அசரியா[21] |
| செராயா[22] | யோசதாக்[23] | யோசுவா[24] | யொயகீம்[25] | எலியாசிப்[26] | யொயதா[27] | யோனத்தான்[28] |
| யதுவா[29] | ஓனியாஸ் 1[30] | சீமோன் 1[31] | ஏலெயாசார[32] | மனாசே[33] | ஓனியாஸ் 2[34] | சீமோன் 2[35] |
| ஒனியாஸ் 3[36] | ஜேசன்[37] | மெனெலாஸ்[38] | அல்சிமஸ்[39] | ஜொனாதன் அப்புஸ்[40] | சைமன் (3) தஸ்ஸி[41] | ஜான் ஹைர்கனஸ் 1[42] |
| அரிஸ்டோபுலஸ் 1[43] | அலெக்சாண்டர் ஜானியஸ்[44] | ஹைர்கனஸ் 2[45] | அரிஸ்டோபுலஸ் 2[46] | ஹைர்கானஸ் 2[47] | ஆன்டிகோனஸ்[48] | அனானல்[49] |
| அரிஸ்டோப்ளஸ் 3[50] | அனானல்[51] | இயேசு[52] | சீமோன்[53] | மத்தியாஸ்[54] | ஜோசர்[55] | ஏலெயாசார்[56] |
| இயேசு[57] | ஜோசர்[58] | அன்னாஸ்[59] | இஸ்மாயில்[60] | ஏலெயாசார்[61] | சீமோன்[62] | ஜோசப் காய்பாஸ்[63] |
| ஜொனாதன்[64] | தியோபிலஸ்[65] | சீமோன் கந்தராஸ்[66] | மத்தியாஸ்[67] | எலியோனியஸ்[68] | ஜோசிபஸ்[69] | அனனியாஸ்[70] |
| இஸ்மாயில்[71] | ஜோசப் கேபி[72] | அன்னாஸ் 2[73] | இயேசு[74] | இயேசு இயேசு[75] | மத்தியாஸ்[76] | ∴பன்னியாஸ்[77] |

**(2) பிரதான ஆசாரியரான இயேசுவின் வம்ச வரலாறில் 77 தலைமுறைகள் (லூக்கா 3:23-28)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இயேசு[1] | யோசேப்பு[2] | ஏலி[3] | மாத்தாத்[4] | லேவி[5] | மெல்கி[6] | யன்னா[7] |
| யோசேப்பு[8] | மத்தத்தியா[9] | ஆமோஸ்[10] | நாகூம்[11] | எஸ்லி[12] | நங்காய்[13] | மாகாத்[14] |
| மத்தத்தியா[15] | சேமேய்[16] | யோசேப்பு[17] | யூதா[18] | யோவன்னா[19] | ரேசா[20] | சொரொபாபேல்[21] |
| சலாத்தியேல்[22] | நேரி[23] | மெல்கி[24] | அத்தி[25] | கோசாம்[26] | எல்மோதாம்[27] | ஏர்[28] |
| யோசே/இயேசு[29] | எலியேசர்[30] | யோரீம்[31] | மாத்தாத்[32] | லேவி[33] | சிமியோன்[34] | யூதா[35] |
| யோசேப்பு[36] | யோனான்[37] | எலியாக்கீம்[38] | மெலெயா[39] | மயினான்[40] | மாத்தாத்தா[41] | நாத்தான்[42] |
| தாவீது[43] | ஈசாய்[44] | ஓபேத்[45] | போவாஸ்[46] | சல்மோன்[47] | நகசோன்[48] | அம்மினதாப்[49] |
| ஆராம்[50] | எஸ்ரோம்[51] | பாரேஸ்[52] | யூதா[53] | யாக்கோபு[54] | ஈசாக்கு[55] | ஆபிரகாம்[56] |
| தேரா[57] | நாகோர்[58] | சேரூக்[59] | ரெகூ[60] | பேலேக்[61] | ஏபேர்[62] | சாலா[63] |
| காயினான்[64] | அர்ப்பகசாத்[65] | சேம்[66] | நோவா[67] | லாமேக்கு[68] | மெத்தூசலா[69] | ஏனோக்கு[70] |
| யாரேத்[71] | மகலாலெயேல்[72] | கேனான்[73] | ஏனோஸ்[74] | சேத்[75] | ஆதாம்[76] | தேவன்[77] |

**(3) மீட்பின் நிர்வாகம்**

- மெல்கிசேதேக்கின் முறைமையின்படி இயேசுவே நித்திய பிரதான ஆசாரியர்.

**எபிரெயர் 6:20**
20. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

**சங்கீதம் 110:4**
4. நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம் மாறாமலுமிருப்பார்.

- பிரதான ஆசாரியன் அனைத்து இஸ்ரேலியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தினார் மற்றும் தேவனின் வார்த்தையின் மூலம் மக்களை நேர்மையாக வழிநடத்தும் விளக்காக கடமையை கொண்டிருந்தார். இருப்பினும், பெரும்பாலான பிரதான ஆசாரியர்கள் இந்தக் கடமையை நிறைவேற்றவில்லை.

**லேவியராகமம் 24:3-4**
3. ஆசரிப்புக் கூடாரத்தில் சாட்சிசந்நிதியின் திரைக்கு வெளிப்புறமாக ஆரோன் அதை
எப்பொழுதும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம்மட்டும் கர்த்தருடைய சந்நிதியில் எரியும்படி
ஏற்றக்கடவன் இது உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை.
4. அவன் எப்பொழுதும் கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான குத்துவிளக்கின்மேல் இருக்கிற
விளக்குகளை எரிய வைக்கக்கடவன்.

- இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பிரதான ஆசாரியர்கள் உண்மையான பிரதான ஆசாரியராக இருந்த இயேசுவைக் கண்டார்கள், ஆனால் அவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள்.

**மத்தேயு 16:21**
21. அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்.

**மாற்கு 15:10**
10. அவர்களை நோக்கி: நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்கவேண்டுமென்றிருக்கிறீர்களா என்று கேட்டான்

**மத்தேயு 27:20**
20. பரபாசை விட்டுவிடக் கேட்டுக்கொள்ளவும், இயேசுவை கொலைசெய்விக்கவும் பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஜனங்களை ஏவிவிட்டார்கள்.

**மத்தேயு 27:41**
41. அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம்பண்ணி:

**மத்தேயு 15:14**
14. அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள் குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார்.

**சங்கீதம் 119:18**
18. உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்.

**1 கொரிந்தியர் 2:10**
10. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார் அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.

**வெளி. 10:2**
2. திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது் தன் வலதுபாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடதுபாதத்தைப் பூமியின்மேலும் வைத்து,

**வெளி. 10:8-11**
8. நான் வானத்திலிருந்து பிறக்கக்கேட்ட சத்தம் மறுபடியும் என்னுடனே பேசி:
சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கும் திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை நீ போய் வாங்கிக்கொள் என்று சொல்ல,
9. நான் தூதனிடத்தில் போய்: அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன். அதற்கு
அவன்: நீ இதை வாங்கிப் புசி இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதூரமாயிருக்கும் என்றான்.
10. நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி, அதைப் புசித்தேன்
என் வாய்க்கு அதுதேனைப்போல மதூரமாயிருந்தது் நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று.
11. அப்பொழுது அவன் என்னை நோக்கி: நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொல்லவேண்டும் என்றான்.

Institution Centered on the Word of Redemptive History

# Berit Theological Seminary And Graduate School

Berit (בְּרִית) means *covenant* in Hebrew. We have been given the calling to the pass on the covenant of the history of redemption in this age. Our online courses are affordable and designed for the busy student who is in ministry. BTS provides world-class Christocentric, Redemptive-historical lectures for church leaders that are accessible anywhere in the world and at any time of day.

## *Our Campuses*

**Korea Campus** *Available languages: Korean, English, Chinese, Indonesian*

- **Website** e.berit.kr
- **Tel** +82-2-2678-6464
- **Fax** +82-2-2678-6446
- **WhatsApp/WeChat** +82-10-8695-0299
- **E-mail** berit6464@daum.net
- **Address** 5F, Huisun B/d, 159, Dangsan-ro, Yeongdeungpo-gu, Seoul, Republic of Korea

**US Campus** *Available Languages: English, Spanish*

- **Website (English)** berit.us
- **Website (Spanish)** berit.us/es/
- **Tel/WhatsApp (English)** +1-516-633-6271, **WhatsApp (Spanish)** +1-863-242-0779
- **Email** admin@berit.us
- **Facebook (English)** www.facebook.com/berittheologicalseminary
- **Facebook (Spanish)** www.facebook.com/seminariotheologicoberit
- **Address** 4156 E. Oglethorpe Hwy, Hinesville, 31313, Georgia, USA

* USA only

## *Online Programs*

*Study Anywhere Online at Affordable Costs*

**Korea e.berit.kr / USA berit.us**

| Program | | # of Years | Admission Requirements |
|---|---|---|---|
| Bachelor of Biblical Studies (B.B.S) | | 2 years | High school diploma |
| Master's | Biblical Studies (M.B.S) | 2 years | Bachelor's degree |
| Master's | Divinity (M.Div) | 2 years (Korea)<br>3 years (USA) | Bachelor's degree |
| Doctoral | Biblical Studies (D.B.S) | 2 years | M.B.S or M.Div degree from Berit |
| Doctoral | Ministry (D.Min) | 2 years | M.Div degree from Berit or the equivalent from other accredited institutions |
| Transfer to Ivy Christian College, USA | | Can Vary | For those who wish to obtain a Bachelor's degree |
| Transfer Courses for All Programs | | 1 year | Contact school |
| Certificate in Mastering Redemptive History NEW! | | 1 year | For those who wish to learn the history of redemption |

### Admission Requirements

1. Application form
2. Diploma or proof of the highest level of education
3. A Letter of Recommendation
4. Transcript (Relevant for transfer students)
5. Submission Method: E-mail, Fax, Mail, Online

# History of Redemption *(Heilsgeschichte)*, the Overarching Theme That Opens Up the Bible

The Bible was written for the salvation of mankind. When we view every narration in the 66 books of the Bible through the overarching theme of "God's history of salvation," our eyes will be opened to the God's profound will therein.



## Dr. Bruce K. Waltke

- World-renowned Old Testament Scholar
- NASB, NIV Translation Committee Member
- Professor Emeritus, Regent College
- Professor Emeritus, Knox Theological Seminary
- Former Professor, Westminster Theological Seminary
- Former Professor, Dallas Theological Seminary

"The greatest tradition of the 2,000-year church history is biblical research and prayer. Rev. Park's ministry has been very faithful to this tradition. I'm very impressed with his ministry and I just delight in his emphasis on the Word of God. Basically, the History of Redemption series was good. I am very impressed with his knowedlge of the Bible and his sound theology.

The author's evangelical faith is shown through the series and should be required to be read by many pastors in America."



"Just as God trained Apostle Paul in Arabia for 3 years before He used him, God trained Rev. Abraham Park in Mt. Jiri for 3 years in order to use him throughout the world."

## Dr. Warren A. Gage

- Professor Emeritus of Old Testament, Knox Theological Seminary



**Author's Profile**

- Born in Sariwon, Hwanghe-do, Korea
- B.A. in Corporate Management from Kookmin University
- M.Div. from the Presbyterian General Assembly Theological Seminary
- Honorary D. Min. from Lael College and Graduate School
- Honorary D.D. from Faith Theological Seminary
- Honorary D.D. from Knox Theological Seminary
- Former Moderator of the Hap-dong Conservative General Assembly of the Presbyterian Church in Korea

"Dr. Abraham Park helps us to understand the Bible saying that when we follow the Word, we can obtain eternal life and shine brightly like the lamp. His books are the result of extraordinary studies of the Bible."



**Dr. Norman Manohar**

- President of Faith Theological Seminary



**Dr. Frank A. James III**

- Professor of Historical Theology
- President of Biblical Theological Seminary
- Former President of Reformed Theological Seminary

"One simply cannot overstate the importance of Genesis as the foundational paradigm for all Christian thinking. Dr. Abraham Park is to be congratulated for his important and worthy contribution to our understanding of this foundational book. He carefully considers the 10 genealogies of Genesis and employs these genealogies to reveal the core of God's work of redemption in history, which find their ultimate expression in the work of Jesus Christ.
Dr. Abraham Park's book is a journey worth taking. I heartily recommend this insightful work. Read it, study it, pray over it, and then put its wisdom into your life and ministry!"

# SINGAPORE

## HISTORY OF REDEMPTION SEMINAR